செய்தி வெளியீடு எண்.110 நாள்.01.09.2021

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு அவர்கள் தலைமையில், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.விஜயாராணி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், இன்று (01.09.2021) சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் கூட்டரங்கில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில், மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை மூலமாக ரூ.3,10,571/- மதிப்புள்ள 3 பேட்டரியால் இயங்கும் சக்கர வண்டிகள் மற்றும் 2 தையல் இயந்திரங்கள், மாவட்ட சமூக நலத்துறை மூலமாக ரூ.1,99,960/- மதிப்புள்ள 40 தையல் இயந்திரங்களும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலமாக ரூ.84,032/- மதிப்புள்ள 19 தையல் இயந்திரங்கள் மற்றும் 2 விலையில்லா தேய்ப்புப் பெட்டிகளும், வருவாய் கோட்டாட்சியர்கள், வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு மூலமாக 17 பயனாளிகளுக்கு ரூ.13,50,000/- மதிப்பில் முதலமைச்சர் சாலை விபத்து நிவாரண நிதி, வருவாய்த் துறையின் கீழ் விதவை உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளி உதவித்தொகை, போன்ற ஓய்வூதியத்தொகை என 59 பயனாளிகளுக்கு ஆண்டிற்கு ரூ.7,08,000/- செலவீன மதிப்புள்ள நலத்திட்டங்களும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் சாலை விபத்து நிவாரணம் ரூ.5,00,000/- நிவாரண நிதியும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் மொத்தம் 143 பயனாளிகளுக்கு ரூ.31,52,563/- மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. விழா நிறைவில், சென்னை மாவட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் துறை சார்பாக, போஷன்அபியான் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 முதல் 30-ந் தேதி வரை தேசிய ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அவ்வண்ணமே இந்த ஆண்டும் “ஆரோக்கியமான வாழ்க்கை நோக்கி ஒருங்கிணைந்த பயணம்” எனும் மையக்கருத்தினைக் கொண்டு செப்டம்பர் முதல் நாளான இன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு கண்காட்சியை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறைஅமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்

பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.விஜயா ராணி இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராஜகோபாலன் அவர்கள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.செ.ரவிச்சந்திரன் அவர்கள், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.இரா.ஜெயஸ்ரீ அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பார்வையிட்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை—01**